[2013 ஏப்ரல் 16

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 226, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

226—

துணை மின் நிலையம்

***7709—திரு. என்.வி. காமராஜ்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதி, கத்திரிப்புலம் கிராமத்தில் 33/11 கே.வி. திறனுடைய துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆம். வேதாரண்யம் தொகுதி, கத்திரிப்புலம் கிராமத்தில் 33/11 கே.வி. துணை மின் நிலையம், 8 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகளோடு அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. துணை மின் நிலையம் அமைப்பதற்கு கத்திரிப்புலம் கிராமத்தில் புல எண் 383/1–ல் ஒரு ஏக்கர் பரப்பளவுள்ள புறம்போக்கு நிலம் கண்டறியப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.*

திரு. என்.வி. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரக்கமெனும் சுபாவத்திற்கு இலக்கணமாய் இருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, சாதாரண இயக்கத் தொண்டனுக்கும் பரிவு காட்டி வாழ்வு தரும் தருமத்*

2013 ஏப்ரல் 16]

தாயே, நாட்டு மக்கள் எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க எந்த நேரமும் உழைக்கும் எங்கள் இணையற்ற நிறைகுடம் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாத மலர்களை வணங்குகிறேன்.

என்னுடைய தொகுதியில் கத்திரிப்புலம், புரவாப்புலம், தேத்தாக்குடி, செம்போடை, கரியாப்பட்டினம், நாகர்குடையன், செட்டிகுளம் ஆகிய ஊராட்சிப் பகுதிகளுக்கு சுமார் 25 கிலோ மீட்டர் தொலைவிலிருந்து மின்சாரம் வழங்கப்படுகிறது. மழைக் காலத்தில் மின்தடை ஏற்படுகிறது. மின் அழுத்தம் குறைவாக உள்ளது. எனவே அப்பகுதியில் சீரான மின்சாரம் கிடைத்திட 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டும் என்ற எங்களது கோரிக்கையை நிறைவேற்றித் தருகிறேன் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தொகுதி மக்களின் அடிப்படை பிரச்சினைகளை, எதைக் கேட்டாலும் உடனடியாகத் தீர்க்கின்ற தமிழகத்தின் ஈடு இணையற்ற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 227, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

227—

பேருந்து நிலையம்

***2944—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகங்கை நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?